# කාර්යසාධන වාර්තාව
# சாதனைகள் அறிக்கை
# Performance Report
# 2014




එලදායිතා ප්‍රවර්ධන අමාත්‍යාංශය
உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு
Ministry of Productivity Promotion

# உள்ளடக்கம்


| | | பக்கஇல. |
|---|---|---|
| 1. | அமைச்சின்செயலாளரதுசெய்தி | 3 |
| 2. | அறிமுகம் | 4 |
| 3. | அமைச்சின்நிறுவனக்கட்டமைப்பு | 5 |
| 4. | தூரநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் | 7 |
| 5. | மனிதவளங்கள்அபிவிருத்திப்பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள் (உள்நாட்டு) | 8 |
| 6. | மனிதவளங்கள்அபிவிருத்திப்பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள் (வெளிநாட்) | 10 |
| 7. | விஷேடகருத்திட்டங்கள் (தேசத்திற்குமகுடம்) | 12 |
| 8. | உள்ளகக்கணக்காய்வுப்பிரிவு | 14 |
| 9. | செலவுகள்பற்றியசாரம்சம் | 15 |
| 10. | தேசியஉற்பத்தித்திறன்செயலகம் | 20 |



**உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரது செய்தி**

உற்பத்தித்திறன் அமைச்சின் 2014 ஆம் ஆண்டினது முன்னேற்றம் அடங்கிய இந்தச் செயலாற்றுகை அறிக்கையை முன்னிட்டு ஒரு செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி உற்பத்தித்திறன் விடயம் பற்றிய தனியான அமைச்சரவை அந்தஸ்துடைய ஒரு அமைச்சு தாபிக்கப்பட்டதன் பின்னர், மஹிந்த சிந்தனை தூரநோக்குத் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பரந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் முகமாக 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் அரச, தனியார் துறைகள், பாடசாலைகள் மற்றும் சமூகம் ஆகிய ஒவ்வொரு துறையையும் இலக்காகக் கொண்டு உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் அரச துறை மற்றும் தனியார் துறை மற்றும் சமூகத் துறை ஆகிய துறைகளிலுள்ளவர்கள் விழிப்பூட்டப்படுகின்றனர். இதன் ஊடாக உற்பத்தித்திறன் மூலம் தேசிய அபிவிருத்தி இலக்கை மிகவும் பயனுள்ள விதத்தில் அடைவதற்கான திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாக்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உற்பத்தித்திறன் விருதுகள் வழங்கப்பட்டன. இதனால் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு இத்தகைய போட்டிகள் பெரிதும் துணையாக அமைகின்றன.

அதே போன்று மனிவலு மற்றும் தொழில் விடயங்களுக்கான திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சுய தொழில் வாய்ப்பு சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்முயற்சிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் மூலம் சுய தொழில்களை முறையான புரிந்துணர்வுடன் பெற்றுக் கொடுத்தல், உள்வாரி மற்றும் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிலில்லாப் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில் செயற்-படுத்தப்படும் தொழில் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில் சந்தைகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற அம்சங்களின் மூலம் நாட்டின் ஊழியர்படையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் ஒவ்வொரு துறையிலும் வினைத்திறன் வாய்ந்த ஒரு ஊழியர்படையைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்புகள் நல்கப் பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி பிரகடனப் படுத்தப்பட்ட தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி, தொழில் நிர்மாண ஊக்குவிப்பு மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகிய இந்தத் திணைக்களத்தின் பொறுப்புப் பணிகள் மேலும் வியாபிப்புப் பெற்றுள்ளன.

இலங்கையின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இந்தப் பொறுப்புப் பணிகளை நிறைவேற்றுகையில் தலைமை வகித்து தொழிற்பட்ட உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் கௌரவ பஷீர் சேகுதாவூத் அவர்களின் அறிவுரைகளும் வழிகாட்டல்களும் பெரிதும் துணையாக அமைந்தன என்பதை இத்தருனத்தில் நன்றியுடன் நினைவுகூற விரும்புகின்றேன். அதே போன்று இந்த அமைச்சின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாகவும் அர்ப்பணிப்பாகவும் தொழிற்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளருக்கும் அதே நேரம் தகவுடைய அதிகாரிகளுக்கும் பதவியணிக்கும், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிப்பாளருக்கும் அதே நேரம் அவரது பதவியணிக்கும், மனிதவலு மற்றும் தொழில் விடயங்களுக்கான திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அதே நேரம் அவரது பதவியணிக்கும் அவர்கள் வழங்கிய சேவைகளுக்கும் மற்றும் நல்கிய ஒத்துழைப்புகளுக்கும் எனது நன்றிகளையும் மற்றும் பாராட்டுக்களையும் இத்தருனத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எதிர்வருகின்ற ஆண்டுகளிலும் இலங்கையில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பினூடாக அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடிய வகையில் உயர்ந்த பங்களிப்பை நல்க நான் எதிர்பார்ப்பதால் அதன் நிமித்தம் ஒவ்வொரு பிரிவினதும் ஒத்துழைப்புகள் கிடைக்கும் என நம்புகின்றேன்.

உபாலி மாறசிங்க
செயலாளர்
உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை – 2014

பயனுள்ள போட்டித் தன்மையுடைய ஊழியர் படையை உருவாக்கும் நோக்கில் 2010-2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு அரச துறையிலும் தனியார் துறையிலும் காணப்படும் உற்பத்தித்திறனையும் மற்றும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கான பரந்த ஒரு திட்டத்தின் கீழ் பல வகை நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் இலங்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் சர்வதேச போட்டி நிலைமைக்கு முகம் கொடுப்பதற்கும் பொருத்தமான ஒரு ஊழியர் படையை முன்னிலைப்படுத்தி சமூகப் பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்தித்திறன் விடயத்தில் முக்கிய கொள்கை ஆக்குநர் தரப்பு என்ற ரீதியில் மாத்திரமன்றி போட்டித் தன்மை வாய்ந்த மனித வளங்களை உருவாக்கி அந்த வளங்களை அபிவிருத்தி செய்யும் முன்னோடி நிறுவனம் என்ற ரீதியிலும் இந்த அமைச்சு நாட்டின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் அனைத்துப் பிரிவுகளையும் விழிப்பூட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற தொழிலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களத்தினதும் மற்றும் உற்பத்திற்கான தேசிய செயலக அலுவலகத்தினதும் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடையும் முகமாக பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டின் சகல அரசாங்கத் திணைக்களங்கள், பாடசாலைகள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சமுதாயங்கள் போன்ற தரப்புகளுக்கு உற்பத்தித்திறன் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் நிறுவனம் என்ற ரீதியில் உற்பத்தித்திறனுக்கான தேசிய செயலகமும் நிகழ்ச்சித்திட்டங்களை வருடாந்தம் செயற்படுத்தி வருகின்றது. அதே போன்று உற்பத்தித்திறனுக்கான தேசிய செயலகம் உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டிகளையும் ஓழங்கமைத்து வருடாந்தம் நடத்தி வருகின்றது. இதன் மூலம் அரசாங்க நிறுவனங்களில் சேவை விநியோக நடவடிக்கையை மிகவும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் தரமான நிலையில் பேணிச் செல்வதற்கும் சேவையை நாடி வருபவர்களுக்கு திருப்தியான முறையில் அந்த சேவைகளை விநியோகிக்கக் கூடிய விதத்தில் நிறுவனத்தையும் மற்றும் மனித வளங்களையும் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் கிட்டும்.

ஜனாதிபதி செயலகம் 2014 ஆம் ஆண்டு முதல் சகல அமைச்சுக்களையும் மாகாண சபைகளின் சகல நிறுவனங்களையும் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டியில் பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கையை எடுக்குமாறு சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் அனைத்து மாகாண பிரதான செயலாளர்களுக்கும் பணிப்புரைகளை விடுத்து அறிவித்தமை உற்பத்தித்திறன் ஊக்குவிப்புப் பணியில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனை எனக் குறிப்பிடலாம். அதே போன்று அமைச்சின் செயலாளரினாலும் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களினாலும் இவ்விடயம் பற்றி அமைச்சரவைக்கான செயலாளர், மாவட்ட செயலாளர்கள், பிரதான செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏற்கெனவே பல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் திறனும் தேர்ச்சியும் வாய்ந்த மனித வளத்தைக் கட்டியெழுப்பும் வகையில் தொழில் வாய்ப்பு சார்ந்த கொள்கையைச் செயற்படுத்தும் நிமித்தம் தொலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களம் பல வகையான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அரச துறையினதும் அதே நேரம் தனியார் துறையினதும், ஏனைய சகல தரப்புகளினதும் பரந்தளவான பங்குபற்றலிலும் ஒத்துழைப்பிலும் உருவான ஊழியர் படை பற்றிய தகவல்கள் அடங்கிய ஒரு முறைமை திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஊழியர் படையில் புதிதாக சேருகின்ற நபர்கள், கல்வி கற்கின்றவர்கள் மறறும் தொழில் வாய்ப்புக்களை

எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ஆகியோருக்கு எதிர்காலத் தொழில் வழிகாட்டல்கள், ஊழியர் சந்தையின் புதிய போக்குகள் பற்றிய தகவல்கள் என்பன தொடர்பான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் நவீனத் தொழில்நுட்ப முறைமையினூடாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.


அரசாங்கத்தின் கொள்கை வரையறைக்கு இணங்க 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான மூன்று ஆண்டு காலங்களுக்கு அமைச்சினால் ஒரு நடுத்தர காலக் கொள்கை வேலைச்சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நடுத்தர காலக் கொள்கை வேலைச்சட்டகத்திற்கு அமைய ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது கணிசமானளவு நன்மைகள் அடையப்பட்டுள்ளன. அதே போன்று அமைச்சுக்கு புதிய ஒரு அர்த்தத்தைக் கொடுத்து 2014 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் திரு உபாலி மாறசிங்க அவர்கள் இந்த அமைச்சின் புதிய செயலாளராக தனது கடமைப் பணிகளைப் பொறுப்பேற்றார்.

இந்த செயலாற்றுகை அறிக்கையானது 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த அமைச்சினதும் மற்றும் இதன் கீழ் இயங்குகின்ற ஏனைய நிறுவனங்களினதும் கருமங்களினதும் பணிகளினதும் பௌதீக முன்னேற்றத்தையும் நிதி முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு, உற்பத்தித்திறனுக்கான செயலகம், தொழிலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களம் ஆகியவற்றின் முன்னேற்றம் என இந்த அறிக்கை 03 பகுதிகளை உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

**உற்பத்தித்திறன் ஊக்குவிப்புக்கான நடுத்தர கால உபாயமுறைத் திட்டம் 2013-2016**




**அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு**



## உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு

### உற்பத்தித்திறனுக்கான தேசிய செயலகம்

உற்பத்தித்திறனுக்கான தேசிய செயலகம் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் ஒரு நிறுவனமாகும். உற்பத்தித்திறனுக்கான இந்த செயலகம் 1994 ஆம் ஆண்டு தொழிலாளர் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டு நாட்டின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நிமித்தம் பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. மஹிந்த சிந்தனைத் தூரநோக்குத் திட்டத்தின் தேசிய கொள்கைக்கு அமைய எதிர்வரும் தசாப்தங்களினுள் உற்பத்தித்திறனை வருடாந்தம் 5 - 6 என்ற அளவில் அதிகரிக்கும் பொறுப்புப் பணி உற்பத்தித்திறனுக்கான செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துகின்ற நிறுவனம் என்ற ரீதியில் உற்பத்தித்திறனுக்கான செயலகம் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள், ஆராய்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. அதே போன்று ஆசிய பிராந்திய உற்பத்தித்திறன் அமைப்பின் ஒருங்கிணைப்புத் தரப்பாகவும் தொழிற்படுகின்றது.

### தொழிலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களம்

தொழிலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களம் 2010 ஆம் ஆண்டு தொழிலாளர் உறவு மற்றும் உற்பத்தித்திறன் விடய அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது.1640/31 ஆம் இலக்க (2010.02.12) ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகத் தாபிக்கப்பட்ட இந்தத் திணைக்களம் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. இலங்கையின் தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில் சார்ந்த கொள்கைகளைச் செயற்படுத்தும் பிரதானமான ஒரு பொறுப்புப் பணி இந்தத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியும் திறனும் நிறைந்த, வலிமையான போட்டித் தன்மையுடைய ஒரு ஊழியர் படையை உருவாக்குதல், தொழில்வாய்ப்பின்மையைக் குறைத்தல், ஊழியர் சந்தைத் தகவல் முறைமையை உருவாக்குதல் ஆகியன அமைச்சின் குறிக்கோள்களில் அடங்குகின்றன. இந்தக் குறிக்கோள்களுடன் இந்தத் திணைக்களம் கொள்கைகளை ஆக்குதல், செயற்படுத்துதல், தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துதல், ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், தொழில்வாய்ப்பு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், ஊழியர் சந்தைத் தகவல் முறைமையைப் பேணிச் செல்லல் முதலிய விடயங்களை மேற்கொண்டு வருகின்றது.

***உற்பத்தித்திறன் என்பது எல்லாம் அல்ல, ஆனால் நீண்டகாலத்தில் அது கிட்டத்தட்ட எல்லாமேதான்..........................***




**தூரநோக்கு**

அனைத்துப் பிரிவுகளிலும் உயர்ந்தளவில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதனூடாக தரத்தில் உயர்ந்த வாழ்வாதார நிலையையும் தரமான வாழ்க்கையையும் ஏற்படுத்துதல்.

**செயற்பணி**

திறன்கள் நிரம்பிய காத்திரமான போட்டித் தன்மை வாய்ந்த ஒரு ஊழியர் படையை உருவாக்குவதற்குத் தேவையான கொள்கைகளைத் தயாரிப்பதும் வழிகாட்டல்களை வகுத்தமைப்பதும் வருடாந்தம் நூற்றுக்கு 5 - 6 உற்பத்தித்திறனை ஊக்குவிப்பதுமான விஷேட கேந்திர நிலையமாகத் திகழ்தல்.

**குறிக்கோள்கள்**

1. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு மற்றும் ஊழியர் சந்தை அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை ஆக்குதலும் மறுசீரமைத்தலும்.
2. இலங்கையின் பொருளதாரத்தில் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கும் ஊழியர் சந்தையிலுள்ள ஊழியர்களின் செயற்பாட்டிற்கும் தேவையான சிந்தனைகளை உதிக்கச்செய்யும் கருமங்களை மேற்கொள்ளல்.
3. உற்பத்தி ஊக்குவிப்பு மற்றும் ஊழியர் சந்தைக் கொள்கைகள் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கான கண்காணிப்பு ஒருங்கிணைப்புப் பணிகளை நிறைவேற்றல்.
4. இலங்கையின் பொருளாதாரத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் அம்சங்களிலும் நிகழும் உற்பத்தித்திறன் முகாமைத்துவ முறையியலை அபிவிருத்தி செய்தல், கண்காணித்தல் மற்றும் உரிய வழிகாட்டல்களை வழங்குதல்.
5. மேற்குறித்த இலக்குகளை அடைவதற்குத் தேவையான ஒரு நிறுவன சார் வேலைச்சட்டகத்தையும் முறையியலையும் மீள்ஸ்தாபித்தல்.




## பதவியணிக்கான பயிற்சிகள் - 2014

நிறுவனத்தின் குறிக்கோள்களை அடையும் பொருட்டு பயிற்சி பெற்ற ஒரு பதவியணி இருத்தல் அவசியமாகும். ஊழியர் படையை வலுப் பெறச்செய்வதும் ஊழியர்களை திறன் வாய்ந்தவர்களாக மாற்றுவதும் நிறுவனத்தின் வெற்றிக்குக் காரணமாக அமையும். இந்த அமைச்சுக்கு 2013 ஆம் ஆண்டு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் அடங்கலாக மொத்தப் பதவியணியினதும் திறன்களை மேம்படுத்துவதற்கும் விடய அடிப்படையிலான பயிற்சிகளை வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. அதே போன்று சேவை அவசியத்தின் பேரில் மொழி சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிறுவனம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| தமிழ் மொழி உயர் பாடநெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 08 |
| சிங்கள மொழி உயர் பாடநெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 01 |
| ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 02 |
| தமிழ் மொழி ஆரம்பப் பாடநெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 04 |
| அரசாங்க வாகனங்கள் பாவனை பராமரிப்பு பற்றிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| அலுவலக முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| தாபனவிதிக்கோவை, நடைமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் பிரயோகம் தொடர்பான பயிற்சிப்பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 02 |
| இடர் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| அலுவலக முறைகள் | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 12 |
| போக்குவரத்து முகாமைத்துவம் | நிர்மாணங்கள் பயிற்சி அபிவிருத்தி நிறுவகம் | 01 |
| ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 03 |
| ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 02 |
| சாரதிகளுக்கான திறன் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு | திறன்கள் அபிவிருத்தி மன்றம் | 02 |

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிறுவனம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| காசாளர் பதவியின் கருமங்களும் பொறுப்புக்களும் பற்றிய பயிற்சி | திறன்கள் அபிவிருத்தி மன்றம் | 01 |
| அலுவலக உதவியாளர் சேவையின் பொறுப்புகளின் அபிவிருத்தி பற்றிய பயிற்சி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| நடைமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் பிரயோகம் தொடர்பான பயிற்சிப்பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| புதிய அரசாங்க முகாமைத்துவ அலுவலர்களின் சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 04 |
| தமிழ் மொழி ஆரம்பப் பாடநெறி | தேசிய மொழிகள் கற்றை மற்றும் பயிற்சி நிறுவகம் | 29 |
| தமிழ் மொழி விஷேட பேச்சுப் பாடநெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 03 |
| தனியாள் கோவைகளைப் பேணுவது தொடர்பான அடிப்படை செயல்முறைப் பயிற்சி | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 25 |
| பதவியணிப் பயிற்சி | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 75 |
| ஆங்கில மொழிச் சான்றிதழ் உயர் பாடநெறி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 01 |
| கணக்குப் புத்தகங்களை உரிய முறையில் பேணுதல் பற்றிய பயிற்சி | திறன்கள் முன்னரங்கு நிலையம் | 01 |
| புதிய அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்களின் சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறி | மாவட்ட செயலாளர் அலுவலகம் - கொழும்பு | 04 |

Human Resources
Training and Development Program
PAVING THE WAY TO SUCCESS

## பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (வெளிநாட்டு)






*வழிகாட்டுதல் மற்றும் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றினூடாக பணி நிலையத்தின் வினைத்திறனையும் பயனையும் அதிகரித்தல்.....*

2014 ஆம் ஆண்டு அமைச்சினதும் அதன் கீழுள்ள நிறுவனங்களினதும் பல அலுவலர்கள் பல வகைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பினது மனித வளங்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதை நோக்கி ஒரு விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் வருடாந்தம் பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன. அதன் பிரகாரம் ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பு ஏற்பாடு செய்த குறிப்பாக உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களில் அதிக எண்ணிக்கையான அலுவலர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டனர்.

| விபரம் | நாடு | அலுவலரின் பெயர் | பதவி |
|---|---|---|---|
| உணவுகள் தயாரித்துப் பொதியிடும் சிறு மற்றும் நடுத்தர அளவான நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பிராந்திய தொழில்முயற்சிகள் கூட்டுறவு என்பன தொடர்பான பல தரப்பு அவதானிப்பு விஜயம் | ஜப்பான் | திருமதி ஐ.எம்.பி. குணரத்ன | பிரதிப் பணிப்பாளர் |
| உற்பத்தித்திறன் ஊக்குவிப்புத் தன்மைகள் தொடர்பான தேசிய உற்பத்தித்திறன் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு | கொரியா | கலாநிதி (திருமதி) தமிதா த சொய்ஸா | செயலாளர் |
| ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் 56-வது அமர்வு மாநாடு | வியற்னாம் | கலாநிதி (திருமதி) தமிதா த சொய்ஸா | செயலாளர் |
| தேசிய உற்பத்தித்திறன் அமைப்புடனான இரு தரப்புக் கூட்டுறவு | இந்துனேசியா மற்றும் மலேசியா | கலாநிதி (திருமதி) தமிதா த சொய்ஸா | செயலாளர் |
| தேசிய உற்பத்தித்திறன் அமைப்புடனான இரு தரப்புக் கூட்டுறவு | இந்துனேசியா மற்றும் மலேசியா | திரு டப்ளியூ.எம்.ஆர்.பி. வீரசிங்க | மேலதிகச் செயலாளர் |
| அரச துறையினதும் மற்றும் சேவைகள் துறையினதும் உற்பத்தித்திறன் அளவீடு பற்றிய கருத்தரங்கு | இந்தியா | திரு டப்ளியூ.எம்.ஆர்.பி. வீரசிங்க | மேலதிகச் செயலாளர் |
| நிலைபெறுதகுதன்மை இலக்கை அடைந்து கொள்ளும் பொருட்டு எதிர்கால சந்ததியினரை ஊக்குவிப்பது தொடர்பான சர்வதேச கருத்தரங்கு மாநாடு | தாயிஜே – சீனா | திரு டப்ளியூ.என்.கே. சோமரத்ன | அபிவிருத்தி உதவியாளர் |

| | | | |
|---|---|---|---|
| அரச சேவைகள் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | தாயிஜே - சீனா | திரு டப்ளியூ.எம்.எம். மத்தும பண்டார | பணிப்பாளர், தே.உ.செ. |
| சுற்றாடல் வளங்கள் மற்றும் வெளியீடு (ISO 14021, 14024 மற்றும் 14025) சம்பந்தமான பயிற்சிப் பாடநெறி | பங்காளதேசம் | திரு பி.ஏ.எஸ். கரன்னாகொட | அபிவிருத்தி உதவியாளர் |
| சுற்றாடல் வளங்கள் மற்றும் வெளியீடு (ISO 14021, 14024 மற்றும் 14025) சம்பந்தமான பயிற்சிப் பாடநெறி | பங்காளதேசம் | திரு ஆர்.எம்.பி.ஜி. ராஜபக்ஷ | அபிவிருத்தி உதவியாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் தன்மை தொடர்பான சேவைகளின் உன்னதத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு | தாய்லாந்து | திரு கே.ஏ.டீ.எஸ். குலதுங்க | அபிவிருத்தி உதவியாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் தன்மை தொடர்பான சேவைகளின் உன்னதத் திட்டம் தொடர்பான கருத்தரங்கு | தாய்லாந்து | திரு ஏ.எச்.டீ. அரங்கல்ல | அபிவிருத்தி உதவியாளர் |
| தாவர உற்பத்தித்திறன் தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல் | மலேசியா | திரு டப்ளியூ.எம். சுரங்க அமரஜீவ | அபிவிருத்தி உதவியாளர் |
| தாவர உற்பத்தித்திறன் தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல் | மலேசியா | திருமதி ஜி.இ.டீ.ஆர். முதியன்சே | அபிவிருத்தி உதவியாளர் |
| உற்பத்தித்திறன் தொழிலுள்ளவர்களை முன்னேற்றுவதற்கான பயிற்சிப் பாடநெறி | பிலிபைன்ஸ் | திரு கே. நாகசிங்கம் | அபிவிருத்தி உதவியாளர் |
| ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் பிரதிநிதிகளுக்கான உபாயத்திட்டங்களைத் திட்டமிடுவது தொடர்பான கருத்தரங்கு | ஜப்பான் | திரு டப்ளியூ.எம்.டீ. சுரங்க குணரத்ன | பணிப்பாளர், தே.உ.செ. |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி திறன் பற்றிய பட்டப்பின்படிப்புப் பாடநெறி | கொரியா | திரு பீ.ஏ.டீ. சுபசிங்க | உதவிப் பணிப்பாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கான கைத்தொழில் பொறியியல் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிப் பாடநெறி | தாயிஜே - சீனா | திரு ஆர்.எம். அசோக்க பெரேரா | அபிவிருத்தி உதவியாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கான நிறைவு நிலை முகாமைத்துவம் தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் | இந்துனேசியா | திரு கே.ஆர்.கே. கங்கானம்கே | அபிவிருத்தி உதவியாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கான LEAN முடிவுகள் முறையியலை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பல தரப்பு அவதானிப்பு ஆய்வு | மலேசியா | திருமதி ஏ.டீ.வை. ஆனந்தனி | உதவிப் பணிப்பாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி தொடர்பான பல தரப்பு அவதானிப்பு ஆய்வுக் குழு | தாயிஜே - சீனா | திரு டீ.எம்.எச். சமரசிங்க | அபிவிருத்தி உதவியாளர் |
| ஆசிய பசுபிக் பிராந்திய சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் வலையமைப்பு அபிவிருத்தி தொடர்பான பல தரப்பு ஆய்வுக் குழு | தாயிஜே - சீனா | திரு ரீ.எஸ்.என். பெர்னாந்து | அபிவிருத்தி உதவியாளர் |
| ஆசிய பசுபிக் பிராந்திய சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் வலையமைப்பு அபிவிருத்தி தொடர்பான பல தரப்பு ஆய்வுக் குழு | தாயிஜே - சீனா | திருமதி இ.சி. அமரசிங்க | அபிவிருத்தி உதவியாளர் |

| | | | |
|---|---|---|---|
| உறுப்பு நாடுகள் அல்லாத நாடுகளின் உற்பத்தித்திறன் நிறுவனங்களின் வர்த்தக மற்றும் சேவை மாதிரிகள் பற்றிய ஆய்வு நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | திரு டப்ளியூ.எம்.ஆர்.பி. வீரசிங்க | மேலதிகச் செயலாளர் |
| ஆசிய சுற்றாடல் மற்றும் பொருளியல் பற்றிய கருத்தரங்கு | ஜப்பான் | திருமதி பி. எதிரிசிங்க | சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| ஆசிய சுற்றாடல் மற்றும் பொருளியல் பற்றிய கருத்தரங்கு | ஜப்பான் | திருமதி பீ.ஜி.ஐ. ஐராங்கனி | பிரதான கணக்காளர் |
| அரச துறைக்கான தர நியம விருது பற்றிய கருத்தரங்கு | சிங்கபூர் | திருமதி டீ.எம்.ஜி. மேகலா திலந்தி | அபிவிருத்தி உதவியாளர் |
| அரச துறைக்கான தர நியம விருது பற்றிய கருத்தரங்கு | சிங்கபூர் | திரு ஆர்.எம். காமினி பியதாச | அபிவிருத்தி உதவியாளர் |
| மூன்றாம் உலக நாடுகளின் தாவர உற்பத்தித்திறன் பற்றிய மாநாடு | சீனா | திரு ரீ.எச்.பீ.ஏ. தேசப்பிரிய | සහකාර අධ්‍යක්ෂ |
| உற்பத்தித்திறன் தொழிலுள்ளவர்களை முன்னேற்றுவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (உயர் பாடநெறி) | மலேசியா | திரு பி.டப்ளியூ.கே.ஜே. ரன்ஜித் பிரேமசிறி | அபிவிருத்தி உதவியாளர் |
| சிறு மற்றும் நடுத்தர அளவான புதிய உணவுகளை உற்பத்தி செய்வது தொடர்பான தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு | சிங்கபூர் | திரு எம். ரங்க துஷார | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| சர்வதேச தாவர உற்பத்தித்திறன் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு | ஜப்பான் | திரு டப்ளியூ.எம். சுரங்க குணரத்ன | பணிப்பாளர் |
| தேசிய உற்பத்தித்திறன் நிறுவனங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | வியற்னாம் | திருமதி ரீ.எஸ்.எம். பெர்னாந்து | அபிவிருத்தி உதவியாளர் |

## விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள்




2014 ஆம் ஆண்டு குருனாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் எனும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அமைச்சும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களும் ஒன்றிணைந்து பல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின.

தேசிய உற்பத்தித்திறனுக்கான செயலகத்தினால் பல உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் அரச, தனியார் துறைகள், கல்வித் துறை, சமுதாயத் துறை முதலிய பிரிவுகளை இலக்காகக்கொண்டு நடத்தப்பட்டன. தொழிலில்லாப் பிரச்சினையைக் குறைக்கும் நோக்கில் தொழிலாளர் மற்றும் தொழில் விடயங்களுக்கான திணைக்களத்தினால் சுய தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிலில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்முயற்சி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடத்தப்பட்டன. இந்த் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய நபர்களுக்கு சான்றிதழ்களும் உபகரணங்களும் தேசத்திற்கு மகுடம் எனும் கண்காட்சி வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன.




உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சினால் அமைக்கப்பட்ட கண்காட்சிக் கொட்டகைகளின் மூலம் அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறே பொது மக்களையும் பாடசாலை மாணவர்களையும் இலக்காகக்கொண்டு உற்பத்தித்திறன் எண்ணக்கரு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் தொளிலாளர் மற்றும் தொழில் விடயத்திற்கான திணைக்களத்தின் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் முதலிய விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. கண்காட்சிக் கொட்டகைகளைப் பார்வையிடுவதற்கு பல எண்ணிக்கையான மக்கள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.



**கண்காட்சிக் கொட்டகையைப் பார்வையிடுவகற்கு வங்க மக்கள்**



**சுய தொழில்முயற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு**





## உள்ளகக் கணக்காய்வு முறையியலை வலுப்படுத்தல்

### உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவும்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது அமைச்சினதும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் விடய அம்சங்களை அரசாங்கத்தின் ஒழுங்குமுறையான சம்பிரதாய ஒரு முறையியலினூடாக அதன் இலக்குகளை அடைந்துகொள்ள உதவுகின்றது. நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான ஒரு உள்ளகக் கட்டுப்பாடு கணக்காய்வினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் அமைச்சினதும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகள் தொடர்ந்தும் கணக்காய்வு விடயங்களில் ஈடுபட்டு வருகின்றன. கணக்காய்வினூடாக இனங்கண்டறிந்த குறைபாடுகளை சீர்செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


அமைச்சினதும் ஏனைய நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் 2014 ஆம் ஆண்டினுள் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் 03 கூட்டங்கள் நடத்தப்பட்டன.






**உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் 2014.12.31 ஆம் திகதிக்கான செலவுகள் பற்றிய சாரம்சம் (ரூ.மில்லியன்)**

| | 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட தொகை | 2014.12.31 ஆம் திகதிக்கான செலவு | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 424.2 | 410.3 | 96.7% |
| மூலதனச் செலவு | 106.1 | 58.7 | 55.3% |
| மொத்தச் செலவு | 530.3 | 469.0 | 88.4% |



# 2014.12.31 ஆம் திகதிக்கான மீண்டெழும் செலவு பற்றிய விபரம்

| நிகழ்ச்சித்திட்டம் | கருத்திட்ட இலக்கம் / பெயர் | வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளிலுள்ள நிதியேற்பாடு | தேறிய நிதியேற்பாடு | 2013.12.31 ஆம் திகதிக்கான மொத்தச் செலவு | தேறிய பயன் சேமிப்புகள் /மிகைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 01 இயக்க சார் செயற்பாடுகள் | **கருத்திட்ட இலக்கம்: 01** **அமைச்சரின் அலுவலகம்** | | | | |
| | தனியாள் வேதனாதிகள் | 10,100,000 | 10,000,000 | 9,404,102 | 595,898 |
| | ஏனைய செலவுகள் | 31,600,000 | 27,450,000 | 24,458,127 | 2,991,873 |
| | **உப மொத்தம்** | **41,700,000** | **37,450,000** | **33,862,229** | **3,587,771** |
| | **கருத்திட்ட இலக்கம்: 02** **நிருவாகம் மற்றும் தாபனம் சார்ந்த சேவைகள்** | | | | |
| | தனியாள் வேதனாதிகள் | 18,200,000 | 17,500,000 | 16,455,830 | 1,044,170 |
| | ஏனைய செலவுகள் | 76,500,000 | 78,860,000 | 75,508,356 | 3,351,644 |
| | **உப மொத்தம்** | **94,700,000** | **96,360,000** | **91,964,186** | **4,365,814** |
| | **முழு மொத்தம்** | **136,400,000** | **133,810,000** | **125,826,415** | **7,983,585** |
| 02 அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் | **கருத்திட்ட இலக்கம்: 01** **தேசிய உற்பத்தித்திறன் செயலகம்** | | | | |
| | தனியாள் வேதனாதிகள் | 220,900,000 | 232,090,000 | 228,124,060 | 3,965,940 |
| | ஏனைய செலவுகள் | 66,900,000 | 58,300,000 | 56,314,901 | 1,985,099 |
| | **உப மொத்தம்** | **287,800,000** | **290,390,000** | **284,443,961** | **5,951,039** |

# 2014.12.31 ஆம் திகதிக்கான மூலதனச் செலவு பற்றிய விபரம்

நிகழ்ச்சித்திட்டம் : 01 - இயக்க சார் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 01- அமைச்சரின் அலுவலகம்

| விடயக் குறியீடு | விடய இலக்கம் | நிதியிடப்பட்டது ( குறியீட்டு இலக்கம்) | விடய விபரம் | வருடாந்த மதிப்பீடுகளிலுள்ள நிதியேற்பாடு (ரூ.) | மொத்தத் தேறிய நிதியேற்பாடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | தேறிய பயன் சேமிப்புகள்/ (மிகைகள்) ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 500,000 | 500,000 | 75,199 | 424,801 |
| 2002 | | 11 | பொறித்தொகுதி, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 500,000 | 500,000 | 261,000 | 239,000 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 500,000 | 500,000 | 436,307 | 63,693 |
| | | | | | | | |
| | | | **மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு** | 40,000,000 | 40,000,000 | - | 40,000,000 |
| 2101 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | 1,000,000 | 1,000,000 | - |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 800,000 | 800,000 | 800,000 | - |
| 2103 | | 11 | பொறித்தொகுதி, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | **43,300,000** | **43,300.000** | **2,572,506** | **40,727,494** |
| | | | **மொத்தம்** | | | | |

நிகழ்ச்சித்திட்டம் : 01 - இயக்க சார் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 02 - நிருவாக மற்றும் தாபன சார் சேவைகள்

| விடயக் குறியீடு | விடய இலக்கம் | நிதியிடப்பட்டது ( குறியீட்டு இலக்கம்) | விடய விபரம் | வருடாந்த மதிப்பீடுகளிலுள்ள நிதியேற்பாடு (ரூ.) | மொத்தத் தேறிய நிதியேற்பாடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | தேறிய பயன் சேமிப்புகள்/ (மிகைகள்) ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 10,000,000 | 10,000,000 | 4,403,243 | 5,596,757 |
| 2002 | | 11 | பொறித்தொகுதி, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 1,000,000 | 1,000,000 | 783,903 | 216,097 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 1,000,000 | 1,000,000 | 935,089 | 64,911 |
| | | | **மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு** | | | | |
| 2102 | | 11 | வாகனங்கள் | 8,040,000 | 6,592,000 | 6,591,712 | 288 |
| 2103 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 4,000,000 | 4,000,000 | 4,000,000 | - |
| | | | **மனித வள அபிவிருத்தி** | 5,00,000 | 5,00,000 | 493,803 | 6,197 |
| 2401 | | 11 | பயிற்சியும் ஆற்றல் கட்டியெழுப்பலும் | | | | |
| | | | | | | | |
| 2502 | | 11 | முதலீடு | 900,000 | 900,000 | 882,593 | 17,407 |
| | | | **மொத்தம்** | | | | |
| | | | | 1,200,000 | 1,200,000 | 1,200,000 | - |
| | | | | **26,640,000** | **25,192,000** | **19,290,343** | **5,901,657** |

நிகழ்ச்சித்திட்டம் : 02- அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள்

கருத்திட்டம் : 03- தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

| விடயக் குறியீடு | விடய இலக்கம் | நிதியிடப்பட்டது ( குறியீட்டு இலக்கம்) | விடய விபரம் | வருடாந்த மதிப்பீடுகளிலுள்ள நிதியேற்பாடு (ரூ.) | மொத்தத் தேறிய நிதியேற்பாடு (ரூ.) | மொத்தச் செலவு (ரூ.) | தேறிய பயன் சேமிப்புகள்/ (மிகைகள்) (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 500,000 | 500,000 | 391,271 | 108,729 |
| 2002 | | 11 | பொறித்தொகுதி, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 200,000 | 200,000 | 191,024 | 8,976 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 500,000 | 500,000 | 415,896 | 84,104 |
| | | | | | | | |
| | | | **மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு** | 1,000,000 | 1,000,000 | 1,000,000 | - |
| 2102 | | 11 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,000,000 | 1,000,000 | 1,000,000 | - |
| 2103 | | 11 | பொறித்தொகுதி, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | | | | |
| | | | **மனித வள அபிவிருத்தி** | 11,000,000 | 12,448,006 | 11,907,488 | 540,512 |
| 2401 | | 11 | பயிற்சியும் ஆற்றல் கட்டியெழுப்பலும் | | | | |
| | | | | 2,000,000 | 2,000,000 | 1,953,988 | 46,012 |
| 2502 | | 11 | முதலீடு | 20,000,000 | 20,000,000 | 19,981,964 | 18,036 |
| 2401 | | 11 | பயிற்சியும் ஆற்றல் கட்டியெழுப்பலும் | **36,200,000** | **37,648,000** | **36,841,631** | **806,369** |
| | | | **மொத்தம்** | | | | |

## அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு

| முற்பணக் கணக்கு | ஆகக்கூடிய பற்று | ஆகக்கூடிய கடன் வரையறை | ஆகக்கூடிய பற்று நிலுவை |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ஒதுக்கீட்டுக் கணக்குச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறை | 7,500,000 | 1,300,000 | 28,000,000 |
| திருத்தப்பட்ட வரையறை | 7,500,000 | 1,300,000 | 28,000,000 |
| உண்மையான | | | |
| 181011 | 5,844,566 | 3,208,284 | 15,599,062 |
| 181012 | 3,056,358 | 5,247,668 | |
| மொத்தம் | **8,900,924** | **8,455,952** | **15,599,062** |

## பொது வைப்புக் கணக்கு

| பெயர் | கணக்கு இலக்கம் | 2014.01.01 ஆம் திகதிக்கான ஆரம்ப நிலுவை | ஆண்டினுள் காணப்படும் பற்றுக்கள் | ஆண்டினுள் காணப்படும் வரவுகள் | 2014.12.31 ஆம் திகதிக்கான நிலுவை |
|---|---|---|---|---|---|
| **பொது வைப்புக் கணக்கு** | **6000/0000/0015/0181** | **3,252,137.15** | **14,721,170.23** | **17,421,877.37** | **5,952,844.29** |

## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

இலங்கை 1966 ஆம் ஆண்டு ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் உறுப்புரிமையைப் பெற்றது. அன்று முதல் உற்பத்தித்திறனை ஊக்குவிக்கும் நிமித்தம் பல நடமுறைகள் பின்பற்றப்பட்டன. அதே போன்று 1997-2006 ஆண்டு காலப் பகுதியில் உற்பத்தித்திறன் தசாப்தம் என பெயர் சூட்டப்பட்டது. 2002 ஆம் ஆண்டு வரலாற்றில் மிக முக்கியமான வழிகாட்டல் அறிகுறியைப் பதிந்து அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளுக்கும் தேசிய உற்பத்தித்திறன் தொடர்பான கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. அன்றிருந்த தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வழிகாட்டலில் அரச துறை, தனியார் துறை, பாடசாலைகள், சனசமூகம் ஆகிய துறைகளின் ஊடாக உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு பற்றி விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், விருது வழங்கும் வைபவ ரீதியான விழா நிகழ்வுகள், போட்டிகள், மாதிரிக் கம்பனிகளைக் கட்டியெழுப்பல் அதே நேரம் சிறு மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களை முன்னேற்றல் முதலியன போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டன. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு 2010 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. அதனையடுத்து தேசிய உற்பத்தித்திறன் செயலகமும் அந்த அமைச்சின் செயல்நோக்கின் கீழ் கொண்டு வரப்பட்டது.


தேசிய உற்பத்தித்திறன் செயலகம் 2020 ஆம் ஆண்டளவில் ‘அனைவருக்கும் உற்பத்தித்திறன்’ குறிக்கோளை அடையும் நிமித்தம் ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பினதும் மற்றும் அதன் உறுப்புரிமையைப் பெற்ற நாடுகளினதும் ஒத்துழைப்புடன் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு பற்றிய பல நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் செயற்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்களை கீழ்காணும் பிரிவுகளின் கீழ் சுட்டிக்காட்டலாம்.

1. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
2. உற்பத்தித்திறன் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி
3. உற்பத்தித்திறன் விருது வழங்கல் போட்டிகள் மற்றும் விருது வழங்கல்
4. ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் ஒருங்கிணைப்பு விடயங்கள்
5. உற்பத்தித்திறன் சம்பந்தமான பிரசார நடவடிக்கைகள்

அத்தகைய சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலும் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பற்றிய சாரம்சம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.


**தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் 2014.12.31 ஆம் திகதிக்கான செலவுகள் பற்றிய சாரம்சம் (ரூ.மில்லியன்)**

| | 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மில். ) | 2014.12.31 ஆம் திகதிக்கான செலவு (ரூ.மில். ) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 290.4 | 284.4 | 97.9 |
| மூலதனச் செலவு | 37.6 | 36.8 | 97.8 |
| மொத்தச் செலவு | 328.0 | 321.2 | 97.9 |




## 1. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் குறிப்பாக கீழ்காணும் துறைகளை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், விஷேட கருத்திட்டங்கள், ஆலோசனை சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் என செயற்படுத்தப்படுகின்றன. அதே போன்று பிரதேச செயலாளர் மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித்திறன் பற்றிய உத்தியோகத்தர்களினாலும் நாட்டின் சகல பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.



2014 ஆம் ஆண்டு உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு தொடர்பாக கல்வி, தனியார் மற்றும் சமூகம் ஆகிய துறைகளில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப் பட்டுள்ளன.

| **துறை** | **நிறுவனம்** | **நிறுவனங்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|---|
| | | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| **கல்வித் துறை** | முன்-பள்ளிக்கூடம் | 1000 | 1776 |
| | பாடசாலை | 600 | 1405 |
| | உயர் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவகம் | 10 | 50 |
| **அரச துறை** | அமைச்சு | 20 | 35 |
| | மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகம் | 600 | 1509 |
| **தனியார் துறை** | சிறு மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிற்சாலைகள் | 500 | 512 |
| **சமூகத் துறை** | கிராமங்கள் | 600 | 834 |
| | உறுப்புரிமை மைய நிறுவனங்கள் | 175 | 181 |
| | அக்கறையுடைய தரப்பு | 150 | 169 |

## 1.1 கல்வித் துறையில் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

கல்வித் துறையில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சை இணைத்துக் கொண்டு கல்வித் துறைக்குரிய சகல நிறுவனங்களிலும் செயற்படுத்தப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட விஷேட கருத்திட்டங்களாக கல்வி அமைச்சின் வலயக் கல்வி காரியாலயங்களை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களுடன் சம்பந்தப்படுத்தப்படச் செய்கின்ற கருத்திட்டங்கள், கல்விக் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு மத்தியில் உற்பத்தித்திறன் பற்றிய அறிவை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் 'இசுரு ஆசிரியர்' கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களை குறிப்பிடலாம். 2014 ஆம் ஆண்டு 06 வலயக் கல்விக் காரியாலயங்களில் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்தும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதே போன்று 'இசுரு ஆசிரியர்' கருத்திட்டத்தின் மூலமும் 18 ஆசியர் கலாசாலைகளில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு 7214 ஆசிரியர்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளனர்.







**தேசிய கல்விக் கல்லூரிகளின் உயர் முகாமைத்துவத்திற்கான உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம்**

**ஹாப்பிட்டிகம ஆசிரியர் கல்வி கலாசாலையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

அதே போன்று கல்வித் துறையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்-பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் செயற்படுத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களினூடாக ஆக்கத்திறன், நவீனத்துவம் மற்றும் ஏனைய பல சிந்தனை ஆற்றல்கள் என்பவற்றை மாணவர்களுக்கு மத்தியில் வளர்ப்பதற்கான பின்னணி சந்தர்ப்பம் கிட்டும். ஒரு நபர் உற்பத்தித்திறன் உடைய ஒரு முதியவனாக மாற வேண்டும் என்றால் அதாவது அவன் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் என்பன நிறைந்த முழுமையான ஒரு மனிதனாக மாற அவசியம் எனில் உயர்ந்த உன்னத பண்புகளையுடைய ஒருவனாக இருப்பது அவசியமாகும். அத்தகைய ஒரு நபரினால் நாட்டின் அபிவிருத்திற்குப் பங்களிக்க முடியும். அதே போன்று சமூகத்தை ஊக்குவிப்பதற்குத் தேவையான சிறந்த ஒரு சமூகப் பரம்பரையை கட்டியெழுப்பும் ஆற்றலும் அத்தகைய மனிதனுக்குக் கிடைக்கும். இதன் அடிப்படையில் நோக்குகின்ற போது கல்வித் துறையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களின் இறுதி நோக்கம் யாதெனில் சுய வலிமையில் எழுந்து நிற்கக்கூடிய ஆக்கபூர்வமன சிந்தனையுடைய பயனுள்ள பிரஜைகளின் ஊழியர்படையில் மாணவர்களை ஒன்றிணைப்பதாகும்.

### 1.1.1 முன்-பள்ளிக்கூடங்களுக்கான உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்







*பிபிதென மல்கெக்குலு...........*

முன்-பள்ளிக்கூடங்களுக்கான உற்பத்தித்திறன் எண்ணக்கருவை அறிமுகப் படுத்துவது பற்றிய நிகழ்ச்சித்திட்டம் 2013 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 16 மாவட்டங்களில் முன்-பள்ளிக்கூட ஆசிரியைகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 2158 ஆசிரியைகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டு 1776 முன்-பள்ளிக்கூடங்களில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

அதே போன்று மாத்தறை மாவட்டத்திலும் 237 முன்-பள்ளிக்கூடங்களின் பங்குபற்றலில் முன்-பள்ளிக்கூடங்களுக்கு இடையில் மாவட்ட உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா நடத்தப்பட்டு 87 முன்-பள்ளிக்கூடங்கள் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களை செயற்படுத்தும் முன்-பள்ளிக்கூடங்களாக உறுதிசெய்யப் பட்டுள்ளன.





உறுதிசெய்யப்பட்ட முன்-பள்ளிக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல்கள் (மாத்தறை ப்ரிலியென்ட் முன்-பள்ளிக்கூடம்)

## 1.1.2 பாடசாலைத் துறையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்



*விக்கசித்த ஹெட்ட தினட்ட தெய தினென பரபுரக் .........*




தேசிய உற்பத்தித்திறன் செயலகம் நாடளாவிய ரீதியில் பாடசாலை உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. 2013 ஆம் ஆண்டு கல்வித் துறையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு சார் வள நபர்கள் படையை அதிரிப்பதற்கும் அந்த நபர்களைப் பயிற்சியளிப்பதற்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம் பார்க்கும் போது 178 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. 2014

ஆம் ஆண்டு 1405 பாடசாலைகளில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.


மேலும், பாடசாலை உற்பத்தித்திறன் சங்கங்களைத் தாபிக்கும் அடிப்படை நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அதனூடாக உற்பத்தித் திறன் எண்ணக்கருக்களை மாணவர்கள் மத்தியில் ஆக்கபூர்வமான முறையில் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.






**அனுராதபுர மாவட்டத்தின் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மேம்பாடுகள்**

## 1.1.2 உயர் கல்வித் துறையின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்




*ரட்டட்ட ஹித்தெத்தி தெயட்ட வெடத்தி புரவெசியன் .........*

2013 ஆம் ஆண்டு புதிய ஒரு நிகழ்ச்சித்திட்டமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கான உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான 02 உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு மே/யூன் மாதங்களில் நடத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டு 50 வாழ்க்கைத்தொழில்நுட்ப நிறுவகங்களில் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. ருஹுணுப் பல்கலைக்கழகம் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கல் போட்டிகளில் பங்குபற்றி உற்பத்தித்திறனுக்கான விருதைப் பெற்றுக் கொண்டது. ருஹுணுப் பல்கலைக்கழகத்தில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் வியாபிக்கும் நிமித்தம் எமது செயலாளர் அந்தப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருடன் ஒரு கலந்துரையாடலை நடத்தினார்.



**ருஹுணுப் பல்கலைக்கழக உபவேந்தருடன் இடம்பெற்ற கலந்துரையாடல்**





**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிகள் திணைக்களத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

## 1.2 அரச துறை உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்









*'மக்கள் நேய சிறந்த அரசாங்க சேவை'*

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இது வரை காலமும் அதிக முன்னுரிமை அளித்திருப்பது அரச துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காகும். ஏற்கெனவே பல எண்ணிக்கையான அரசாங்க நிறுவனங்கள் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களைப் பின்பற்றி தமது சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சித்து வருகின்றன. நாட்டு மக்களுக்கு உன்னத சேவை ஒன்றை வழங்கும் பொருட்டு மத்திய அரசாங்கத்தின் அமைச்சுகளிலும், திணைக்களங்களிலும், மாகாண அரசாங்கத்தின் அமைச்சுகளிலும், திணைக்களங்களிலும், மக்களுக்கு மிகவும் நெருங்கிய நிறுவனமான மாவட்ட செயலகங்களிலும் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் இன்னும் உள்ளூராட்சி அதிகார சபைகளிலும் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துகின்ற போது திணைக்களத் தலைவர்களின் முழுமையான கவனத்தை ஈர்ப்பதற்கும் மற்றும் அரச துறையின் உற்பத்தித்திறன் விடயங்களை முறைப்படுத்துவதற்கும் என உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரினால் அமைச்சின் செயலாளர்களையும், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களையும் அதே நேரம் மாவட்ட செயலாளர்களையும், மற்றும் பிரதேச செயலாளர்களையும் விழிப்பூட்டும் 51 நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்டுள்ளன.





**பொது நிருவாக அமைச்சில் இடம்பெற்ற அடிப்படைக் கலந்துரையாடல்கள்**

## அமைச்சுக்கான உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள்

உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் ஏனைய அமைச்சின் செயலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அமைச்சுகளிலும் மற்றும் அந்த அமைச்சுகளுடன் இணைந்த நிறுவனங்களிலும் உற்பத்தித்திறன் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் முறையான விதத்தில் செயற்படுத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டு பல அமைச்சுகளில் நடத்தப்பட்ட இந்த உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 102 ஆகும். அரச துறையிலும் மற்றும் மாவட்டங்களினதும் பிராந்தியங்களினதும் நிறுவனங்களில் நடதப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 1509 ஆகும். இது தவிர, கீழ்காணும் அரசாங்க நிறுவனங்களிலும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான விஷேட கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

- இலங்கைப் பொலிஸ் திணைக்களம்
- இலங்கை வங்கி
- இலங்கை சுங்கத் திணைக்களம்
- மக்கள் வங்கி (26 கிளைகள் - கம்பஹா)
- கிராமிய அபிவிருத்தி வங்கி
- தேசிய சேமிப்பு வங்கி
- வலயக் கல்வி அலுவலகங்கள்
- 'இசுரு' ஆசிரியர் கருத்திட்டம் - தேசிய ஆசிரியர் பயிற்சி கலாசாலை
- நீதிமன்றங்களின் விஷேட கருத்திட்டங்கள்
- 2014 ஆம் ஆண்டு அமைச்சுகளில் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய விபரங்கள்

| | **அமைச்சு** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | நீதி அமைச்சு | 40 | 2243 |
| 2 | கடற்றொழில் அமைச்சு | 9 | 894 |
| 3 | சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு | 1 | 106 |
| 4 | சுதேசிய மருத்துவ அமைச்சு | 1 | 45 |
| 5 | கல்வி அமைச்சு | 1 | 75 |
| 6 | கல்வி நிறுவகம் -இசுரு ஆசிரியர்கள் கருத்திட்டம் | 18 | 7214 |
| 7 | நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு பற்றிய அமைச்சு | 2 | 118 |
| 8 | தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு – கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் | 1 | 40 |
| 9 | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு | 3 | 155 |
| 10 | கலாசார அலுவல்கள் அமைச்சு | 2 | 117 |
| **மொத்தம்** | | 102 | 3503 |

## நிதி அமைச்சில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

நீதி முறைமையினுள் உற்பத்தித்திறன் எண்ணக்கருவையும் அதே நேரம் 5S முறையியலையும் செயற்படுத்துவதால் அரச துறை சார்ந்த உற்பத்தித்திறன் தொடர்பில் மக்களின் உள்ளங்களில் நல்லெண்ணம் ஏற்படும் என தேசிய உற்பத்தித்திறன் செயலகம் எதிர்பார்க்கின்றது.






**நீதி அமைச்சில் உற்பத்தித்திறன் எண்ணக்கரு தொடர்பில் நடத்திய நிகழ்ச்சித்திட்டங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் - குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் இலகுவான முறையில் கோவைகளைக் கண்டறியக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதம்**

## பிராந்திய ரீதியிலுள்ள அரச நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்கள்

அரச துறையில் 1509 நிறுவனங்களை உள்ளடக்கி 2014 ஆம் ஆண்டு உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 2014 ஆம் ஆண்டு தமிழ் மொழியிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.




**கெயிஷன் கருத்திட்டம் - யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

அரச துறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு புதிய முறைமைகளும் மற்றும் வேலைத்திட்டங்களும், அலுவலக சூழல் சிறந்த முறையில் காணப்படுவதும் மிக முக்கியமானதாகும். இதற்கு உற்பத்தித்திறன் பற்றிய எண்ணக்கரு சிறந்த ஒரு சாதனமாகும். உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உருவாகிய அந்த நல்லெண்ண மாற்றங்கள் மிகவும் சிறிதளவில் இருந்தாலும் அந்த மாற்றங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.









**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகள்**

### 1.1.3 தனியார் துறை உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்



*'உற்பத்தித் துறையின்
உற்பத்தித்திறனுக்கு பலமான ஓர் கரம்'*



கெயிஷன் கருத்திட்டம் தனியார் உற்பத்தித்திறனை ஊக்குவிக்கும் முக்கியமான கருத்திட்டமாகும். இந்த கருத்திட்டத்தைக் கொண்டு சிறு மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில் நிறுவனங்களும் முழுமொத்தத் தனியார் துறையிலும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நிமித்தம் அதிக கவனம் செலுத்தியுள்ளன. இந்தக் கெயிஷன் கருத்திட்டம் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ் கெயிஷன், தாவர உற்பத்தித்திறன், தர நியம வட்டம் முதலிய பல உற்பத்தித்திறன் பற்றிய எண்ணக்கருக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. அதே போன்று ஒவ்வொரு நிறுவனத்தினதும் செயல்வழி முறைகளை மேம்படுத்தும் பொருட்டு அதிக கவனம் செலுத்தப்பட்டது.

2013 ஆம் ஆண்டு இதன் இரண்டாம் கட்டம் கம்பஹா மாவட்டத்திலும், களுத்துறை, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் துறையை முன்னேற்றும் பொருட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தப்பட்டது. அதே போன்று 5S, தர நியம வட்டம், தாவர உற்பத்தித்திறன் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக இதன் கீழ் இந்த நிறுவனங்களில் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலத்தில் கெயிஷன் முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்தக் கெயிஷன் கருத் திட்டத்தை அறிமுகப்படுத்தியன் பயனாக தனியார் துறையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளில் இதன் குறித்த இலக்கை அடைய முடிந்துள்ளது. வெற்றிச்சாதனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஆண்டுகளிலும் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளில் கெயிஷன் கருத்திட்டத்தைச் செயற்படுத்த தேசிய உற்பத்தித்திறன் செயலகம் எதிர்பார்க்கின்றது.

## கெயிஷன் கருத்திட்டம்



விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம்



'சுச்சி' யோர்கெட் (தனியார்) நிறுவனம் - தாவர உற்பத்தி பற்றிய எண்ணக்கருவைப் பிரயோகித்தல்



‘சுச்சி’ யோர்கெட் (தனியார்) நிறுவனம் - செயன்முறைகளை மேம்படுத்தியதனூடாக நாள் ஒன்றுக்கு உற்பத்திக் கொள்திறன் 2000 முதல் 3000 வரை அதிகரித்துள்ளது



ட்ரைடெக் நிறுவனம்



உடுதும்பற டெக்ஸ்

## சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களின் வெற்றி

| நிறுவனத்தின் பெயர் | ஊழியர்படை | | மாதாந்தப் புறழ்வு | | புதிய முதலீடுகள் (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| | 2010 மார்ச் | 2013 மார்ச் | 2010 மார்ச் | 2013 மார்ச் | 2012 - 2013 |
| கெண்டிட் டெக்னிக்ஸ் | 8 | 25 | 0.5 | 3.0 | 8.0 |
| எக்ஸ்கே பொலிபெக் | 3 | 12 | 0.8 | 4.0 | 10.0 |
| மவுண்ட் பெக் | 50 | 120 | 7.0 | 15.0 | 500.0 |
| சில்வெர் ஸ்டார் பெயின்ட் | 15 | 50 | 3.5 | 5.5 | 12.0 |
| விக்ரம ஆராய்ச்சி லெப் | 25 | 35 | 1.2 | 3.5 | 12.0 |
| புத்தி இன்டஸ்ட்ரீஸ் | 35 | 80 | 2.6 | 9.5 | 80.0 |
| ஹாவெட் பெஷன் | 50 | 130 | 1.5 | 7.0 | 70.0 |
| ரன்மோ ப்ளாஸ்டிக் | 5 | 12 | 1.0 | 2.5 | 5.0 |
| தேதுனு பேக்கர்ஸ் | 18 | 25 | 2.8 | 3.5 | 6.0 |
| பொலிமர் டெக் | 20 | 40 | 3.0 | 4.0 | 25.0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நில் ரோஸ் அட்வர்டைஷிங் | 12 | 15 | 1.5 | 3.8 | 6.0 |
| மெதெம்மான | 12 | 15 | 0.65 | 0.8 | - |

பாரியளவில் உற்பத்திச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் 19 நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்பட்டுள்ளன.



**DFCC நிறுவனத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**



**Modern Pack நிறுவனத்தில் பார்வையிடும் சந்தர்ப்பம்**

### 1.1.4 சமூக மைய உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்கள்







நாட்டில் உற்பத்தித்திறன் கலாசாரம் ஒன்றைத் தாபிக்கும் பொருட்டு மிகவும் முன்னுரிமை அளிக்க வேண்டியது எதற்கெனில் குடும்ப மட்டத்தில் உற்பத்தித் திறன் எண்ணக்கருவை வளர்ப்பதற்காகும். உற்பத்தித்திறன் எண்ணக்கரு பற்றிய இந்த அறிவை கிராம மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு மத்தியில் சாதக மனப்பாங்கை விருத்தி செய்வதற்கும், குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்குமான பல வகை வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் முதலீட்டு ஆற்றல்களை அதிகரிக்கச் செய்வதற்கும், நேர முகாமைத்துவம் பற்றி குடும்பங்களுக்கு மத்தியில் விழிப்பூட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. தமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி வாழ்வாதார நிலையை உயர்த்திக் கொள்ளச் செய்வதற்கும் மற்றும் நிலவுகின்ற வளங்களை உச்சளவில் பயன்படுத்தச் செய்வதற்கும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது. 2014 ஆம் ஆண்டு 834 கிராமங்களில் சனசமூக மைய உற்பத்தித் திறன் நிகழ்ச்சித்திட்டங்கள்

செயற்படுத்தப்பட்டுள்ளன. உறுப்புரிமைகளை அடிப்படையாக வைத்து கிராம மட்டத்தில் 181 தொண்டர் அமைப்புகளுக்கும் கிராம மட்டத்தில் 169 அக்கறையுடைய தரப்புகளுக்கும் என நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளன.





**சனசமூக நிகழ்ச்சித்திட்டங்கள் - வவுனியா**








**வீடுகளில் செயற்படுத்தப்பட்ட 5S நிகழ்ச்சித்திட்டங்கள் - பதுளை**

## 2. உற்பத்தித்திறன் பயிற்சியும் திறன் அபிவிருத்தியும்





## 2.1 பதவியணியின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திற்கு 2013 ஆம் ஆண்டு உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட 643 புதிய உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித்திறன் அபிவிருத்தி பயிற்றுவிப்பாளர்களாக பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

### புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| திகதி | நிகழ்ச்சித்திட்டம் | இடம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|---|
| **2014.3.3-5** | அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கரு | எந்திர உபகரணங்கள் நிர்மாண பயிற்சி நிலையம் | 51 | 254,624.00 |
| **2014.8.10** | அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கரு | திருகோணமலை சர்வோதய நிலையம் | 32 | 214,873.00 |
| **2014.7.17 முதல் 8.14 வரை** | அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கரு | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 87 | 121,625.00 |





**புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

## தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அலுவலர்களது திறன் அபிவிருத்தி

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை | நடத்திய நிறுவனங்கள் | செலவு |
|---|---|---|---|
| ஆங்கில மொழிச் சான்றிதழ் பாடநெறி (நடுத்தர இடை மட்டம்) | 03 | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 50 ,000.00 |
| அடிப்படை சிங்கள மொழி | 01 | அரச கரும மொழிகள் திணைக்களம் | 5,000.00 |
| தமிழ் மொழி | 01 | அரச கரும மொழிகள் திணைக்களம் | 5,000.00 |
| அலுவலக முறைகள் | 50 | உற்பத்தித்திறன் அமைச்சு | 158,625.00 |
| **மொத்தம்** | | | **218625.00** |

## வெளி நிறுவனங்களுக்காக நடத்தப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் வெளி நிறுவனங்களின் நிமித்தம் நடத்தப்படுகின்ற திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், உற்பத்தித்திறன் டிப்ளோமா பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் என்பவற்றை குறுங்காலப் பாடநெறிகளாக் குறிப்பிடலாம். 2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தப் பாடநெறிகளிலிருந்து ஈட்டிய வருமானம் 5. 257 மில்லியன் ரூபாவாகும். இது தவிர சுகாதாரத் துறையின் நிமித்தம் 02 நிறைவு நிலை முகாமைத்துவப் பயிற்சிப் பாடநெறிகளையும் நடத்த முடிந்தது. 2014 ஆம் ஆண்டின் போது உற்பத்தித்திறன் டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடநெறியினூடாக உற்பத்தித்திறன் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் உயர் உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் போன்ற எண்ணக்கருக்கள் பற்றிய அறிவு பரந்தளவில் பெற்றுக் கொடுக்கப் படுகின்றது. இதில் 02 விஷேட மொடியூல்கள் வெளிநாட்டு வள நபர்களினால் அணவப்பட்டன. டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றியோர் எண்ணிக்கை 50 ஆகும்.








உற்பத்தித்திறன் டிப்ளோமா பாடநெறி விளம்பரப் பத்திரமும் ஆரம்ப வைபவமும்


## ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டங்கள் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|
| பயிற்றுப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 44 | 100,010.00 |
| சுகாதாரத் துறை நிறைவு நிலை முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி (நிகழ்ச்சித்திட்டங்கள் - 2) | 145 | 286,500.00 |

| பயிற்சிப் பாடநெறிகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் | காலம் | பாடநெறிக் கட்டணம் (ரூ.) | பங்குபற்றுநர் எண்ணிக்கை | வருமானம் (ரூ.) |
| 1 | குறுங்காலப் பாடநெறிகள் | | | | |
| | கெய்ஷென் முகாமைத்துவம் | | 3000.00 | 62 | 186,000.00 |
| | கெய்ஷென் முன்மொழிவு | | 3000.00 | 43 | 129,000.00 |
| | விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் - தாவர உற்பத்தித்திறன் | | 3000.00 | 60 | 180,000.00 |
| | 3 R முறையியல் | | 3000.00 | 33 | 78,000.00 |
| | தாவர உற்பத்தித்திறன் பற்றிய கருத்தரங்கு | | 6000.00 | 25 | 150000.00 |
| | தர நியம வட்டம் | | 3000.00 | 66 | 198,000.00 |
| | தர நியம வட்ட தலைமைத்துவப் பயிற்சி | யூன் 5,6 | 5000.00 | 41 | 205,000.00 |
| | அறிவு முகாமைத்துவம் | ஏப்ரல் 4 | 3000.00 | 37 | 111000.00 |
| | முழு உற்பத்தித்திறன் பேணல் (TPM) | யூலை 4 | 3000.00 | 57 | 171,000.00 |
| | பணி ஆய்வு | ஏப்ரல் 25 | 3000.00 | 15 | 45,000.00 |
| | மாற்றம் பற்றிய முகாமைத்துவம் | மே 30 | 3000.00 | 47 | 141,000.00 |
| | தலைமைத்துவம் | ஆகஸ்ட் 5 | 3000.00 | 55 | 165,000.00 |
| | உற்பத்தித்திறன் அளவீட்டுப் பகுப்பாய்வு | மார்ச் 25 | 3000.00 | 99 | 297,000.00 |
| | மனித வளங்கள் முகாமைத்துவம் | யூன் 17 | 3000.00 | 36 | 108,000.00 |
| | சமநிலைக் கட்டுப்பாட்டு சூத்திரம் | நவம்பர் 3 | 3000.00 | 41 | 1,23,000.00 |
| | மின்சக்தி சார்ந்த கருமங்கள் | திசம்பர் 3 | 3000.00 | 25 | 75,000.00 |
| 2 | உற்பத்தித்திறன் சான்றிதழ் பாடநெறி | | | | |
| | உற்பத்தித்திறன் சான்றிதழ் பாடநெறி I | பெப் 13 - 10 நாட்கள் | 15000.00 | 67 | 1,005,000.00 |
| | உற்பத்தித்திறன் சான்றிதழ் பாடநெறி II | செப் 27 | 15000.00 | 26 | 390,000.00 |
| 3 | உற்பத்தித்திறன் டிப்ளோமா பாடநெறி 1,000,000.00 ரூபா தொகை கிடைக்க வேண்டியுள்ளது | செப் 21 முதல் 1 வருடம் | 50000.00 | 50 | 1,500,000.00 |
| | மொத்தம் | | | 892 | 5,257,000.00 |

**2014 ஆம் ஆண்டு திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு வருமானம் பற்றிய விபரம்**

| ஆண்டு | வருமானம் ரூ.மில். |
|---|---|
| 2003 | 0.714 |
| 2004 | 1.895 |
| 2005 | 1.216 |
| 2006 | 1.685 |
| 2007 | 2.834 |
| 2008 | 3.683 |
| 2009 | 1.933 |
| 2010 | 4.443 |
| 2011 | 4.883 |
| 2012 | 6.965 |
| 2013 | 2.710 |
| 2014 | **8.257** |








குறுங்காலப் பாடநெறி (தர நியம நிகழ்ச்சித்திட்டம்)








குறுங்காலப் பாடநெறி - நிறைவு நிலை முகாமைத்துவம்


குறுங்காலப் பாடநெறி - தாவர உற்பத்தித்திறன்

# 3. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியும் விருது வழங்கலும்






தேசிய உற்பத்தித்திறன் செயலகம் பல வகையான நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக நாட்டில் பலதரப்பட்ட சமூக நிலைகளில் ஏற்படுத்தப்பட்ட உற்பத்தித் திறன் எண்ணக்கருக்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து, அதன் மூலம் வெற்றி பெற்ற நிறுவனங்களை மதித்து நடத்தப்படும் தேசிய உற்பத்தித்திறன் விருகளை வழங்கும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான நிறுவனங்களைப் பங்குபற்றச் செய்து கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டிகள் இன்று பாடசாலைகள், அர தனியார் துறைகள் போன்ற நாட்டில் சகல பிரிவுகளையும் பிரதிநிதிப்படுத்தும் தரப்புகளின் பங்குபற்றலில் நடத்தப் படுகின்றன. தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்குவதற்கான போட்டிகளில் 1376 நிறுவனங்கள் பங்குபற்றியுள்ளன. இதன் மூலம் கிடைத்த வருமானம் 3 மில்லியன் ரூபா ஆகும்.

இந்தப் போட்டிகளின் போது உற்பத்தித்திறன் எண்ணக்கரு மற்றும் தாபன நிருவாகம் ஆகிய இரண்டு விடயங்களில் மிகவும் அறிவும் அனுபவமும் வாய்ந்த கல்விமான்கள் அடங்கிய ஒரு நடுத்தீர்ப்புக் குழுவினால் போட்டித் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இந்த விருது வழங்கல் போட்டிகளில் பல துறைகளையும் பிரதிநிதிப்படுத்தி பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றிருந்த நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள புத்தாக்க விடயங்கள் ஏனைய நிறுவனங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்த விஷேட அனுபவமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நிறுவனத்தின் பௌதீகம் சார் சுற்றாடலை தயார்படுத்திக் கொள்ளல், மிகவும் இலகுவான உற்பத்தித்திறன் சார் உபாயங்களை இனங்கண்டறிதல், தரத்தில் உயர்ந்த சேவைகளுடன் கூடிய உற்பத்திகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஊழியர்களைத் திருப்திப்படுத்தல் போன்ற விடயங்கள், நிறுவனங்களின் குறிக்கோள்களை அடைந்து முழு நாட்டினதும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு துணையாக அமைகின்றன.

ஆலோசனைகள் மற்றும் மதிப்பீடு ஆகியன தொடர்பான செயன்முறைகள் பற்றி தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் நடத்துதுல், விண்ணப்பங்களை அழைத்தல், அடிப்படை நூல் மதிப்பீடு (Desktop Evaluation), களப் பரிசீலனை, தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாக்களை ஏற்பாடு செய்தல் என்பன 2012/2013 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் விருது விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட முக்கிய அடிப்படைச் செயற்பாடுகளாகும். இந்த நோக்கங்களின் நிமித்தம் 16.4 மில்லியன் ரூபா நிதி செலவாகியது.

## தேசிய உற்பத்தித்திறன் விருது விழாக்களை நடத்துதல்

இம்முறை, அதாவது 2012/2013 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் கௌரவ பஷீர் சேகுதாவூத் ஆகியோரின் தலைமையில் செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற நிறுவனங்களுக்கு இந்த விழாவின் போது விருதுகள் வழங்கப்பட்டன. விஷேட திறன்கள் விருது மற்றும் திறன்கள் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற 304 நிறுவனங்களின் நிமித்தம் மாகாண ரீதியான ஒரு விருது விழா செத்சிறிபாய கட்டிடத்தின் கேட்போர்கூ பொது மண்டபத்தில் நடத்தப்பட்டது.

## தேசிய உற்பத்தித்திறன் விருது விழா நிகழ்வில் முதலிடத்தைப் பெற்ற தரப்புகள்

- இ.பு / சீவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி
- இ.பு/ ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலை, குருவிட்ட
- சுகாதார சேவைகள் திணைக்களம், மத்திய மாகாணம்
- பிரதேச செயலாளர் அலுவலகம், புத்தள
- பஸ்பாகே கோறளை பிரதேச சபை
- உக்குவெல மின்னுற்பத்தி நிலையம்



அரச துறையில் முதலிடம் பெற்ற புத்தள பிரதேச செயலாளர் அலுவலகம்



சேவைகள் துறையில் முதலிடம் - உக்குவெல மின்னுற்பத்தி நிலையம்

## வெற்றிபெற்ற நிறுவனங்களின் நவீனங்கள்



ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலையின் பிற்புறத் தோற்றம்



ஹிக்கஸ்வத்த ஆரம்பப் பாடசாலைக்கு பெற்றோர் நல்கிய பங்களிப்பு




பஸ்பாகே கோரளை  பிரதேச சபை அலுவலக
நாளாந்தப் பராமரிப்பு உபகரணங்கள்
வைக்கப்பட்டுள்ள விதம்



பஸ்பாகே கோறளை பிரதேச சபை
அலுவலக ஆவணசாலை


## 2006 ஆம் ஆண்டு முதல் 2012/2013 வரை உற்பத்தித்திறன் விருது வரை முன்வந்த நிறுவனங்கள்




| Total | 824 | 1324 | 1040 | 1017 | 811 | 1376 |
|---|---|---|---|---|---|---|

## 2012/2013 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுகளைப் பெற்ற நிறுவனங்கள் - 502

| துறை | வெற்றிபெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | SC | C | மொத்தம் |
| அரச துறை | 3 | 50 | 87 | 112 | 79 | 331 |
| பாடசாலை | 2 | 9 | 24 | 32 | 36 | 103 |
| தனியார் துறை | 1 | 9 | 13 | 30 | 15 | 68 |




**SC-விஷேட திறன்கள் மற்றும் C திறன்கள்**

## 4. ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பும் (APO) மற்றும் ஒருங்கிணைப்பு விடயங்களும்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் பணிகள் ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்புடன் தொடர்புடையனவாகும். ஜப்பானை மைய நிலையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள ஆசிய பிராந்தியத்திற்கான இந்த உற்பத்தித்திறன் அமைப்பானது (APO) ஒரு சர்வதேச அமைப்பு என்ற ரீதியில் அதன் உறுப்புரிமையைப் பெற்ற நாடுகளின் விவசாயம், விவசாயக் கைத்தொழில் ஆகிய துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குகின்றது. இது வரை ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 20 நாடுகள் இந்த அமைப்பின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளன. இலங்கையும் இந்த அமைப்பின் உறுப்புரிமையை பெற்றுள்ளது. நாடுகளுக்கு இடையில் உற்பத்தித்திறனை ஊக்குவிப்பதில் இந்த அமைப்பு ஒரு உயர்ந்த உன்னத செயற்பணியை நிறைவேற்றுகின்றது. நாடுகளுக்கு இடையில் மாநாடுகள், பொதுவான மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பல கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றை ஏற்பாடு செய்யும் விடயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்கள் |
|---|---|---|
| பயிற்சி | 49 | 67 |
| அவதானிப்பு ஆய்வு செயற்பணி | 09 | 15 |
| NPO களுக்கு இடையிலான இரு தரப்புக் கூட்டுறவுகள் | 1 | 03 |
| தொழில்நுட்ப நிபுணர் சேவைகள் - TES (தாவர உற்பத்தித்திறன் மாநாடு) | 2 | 650 |

## ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் பங்களிப்பில் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நடைபெற்ற விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள்

### NPO தலைவர்களின் 55-வது கருத்தரங்குக் கூட்டம்

இந்தக் கருத்தரங்கு ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் உறுப்புரிமையைப் பெற்ற 20 நாடுகளின் உற்பத்தித்திறன் அமைப்புகளினது தலைவர்களின் பங்குபற்றலில் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான நாட்களில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. ஆசிய பிராந்தியத்திற்கான இந்த உற்பத்தித்திறன் அமைப்பின் தலைவர்கள் மற்றும் அந்த நாடுகளின் விவசாயத் துறையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பிரதிநிதிகள், மற்றும் ஆலோசகர்கள் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இதன் போது, ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் முழுமொத்த உபாயத்திட்டங்கள், உற்பத்தித்திறன் அமைப்புகளுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் அவற்றை வலுப்படுத்துதல், உற்பத்தி, சேவைகள் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பான விஷேட கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டமிடுவது பற்றி கலந்துரையாடப்பட்டது. இந்தக் கருத்தரங்குக்கு 8,069,004.51 ரூபா தொகை செலவாகியது. இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித் திறன் அமைப்பின் செயலாளர் நாயகம் திரு மாரி அமானோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கு சமூகமளித்தமை ஒரு விஷேட சந்தர்ப்பமாகும்.







கருத்தரங்கின் விஷேட நிகழ்வு





ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் செயலாளர் நாயகம் திரு மாரி அமானோ அவர்கள் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சுக்கு வருகை தந்த நிகழ்வு

உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களின் மொத்த உற்பத்தியை அதிகரித்து, வீணாதலைக் குறைத்து சுற்றாடல் வளங்களைப் பாதுகாத்து அதனூடாக சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேசிய தாவர உற்பத்தி பற்றிய மாநாடு நடத்தப்பட்டது. இந்தத் துறையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற சுமார் 200 நபர்களின் பங்குபற்றலில் இந்த மாநாடு முதல் தடவையான இலங்கையில் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி நடத்தப்பட்டது. இதன் போது ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் நிபுணர்களினால் 02 விரிவுரைகளும் உள்நாட்டு நிபுணர்களினால் 05 விரிவுரைகளும் நிகழ்த்தப்பட்டன. இந்த மாநாட்டிற்கு 410,000 ரூபா தொகை லெவாகியது.





**மாநாட்டின் விஷேட நிகழ்வுகள்**

## அறிவு முகாமைத்துவம் பற்றிய மாநாடு

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் அறிவு முகாமைத்துவ சிபுணர்களினது வளப் பங்களிப்பில் ஒரு மாநாட்டை 2014 .09. 05 ஆம் திகதி காணி அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடத்தியது. பல துறைகளையும் பிரதிநிதிப்படுத்தி சுமார் 120 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிற்கு 78,000.00 ரூபா தொகை செலவாகியது.

## அறிவு முகாமைத்துவ விஷேட கருத்திட்டம்

அறிவு முகாமைத்துவம் பற்றிய ஒரு விஷேட கருத்திட்டம் கம்பளைப் பகுதியில் நடத்தப்பட்டது. சிசு மரண வீதத்தைக் குறைப்பது அல்லது ஒழிப்பது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.





**அறிவு முகாமைத்துவ விஷேட கருத்திட்டப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

## தேசிய Lean மாநாடு (Lean Summit 2014)

அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களிலிருந்து சற்று நகர்ந்து உற்பத்தி மற்றும் சேவை சார் துறைகளினுள் உயர்ந்த உன்னத உற்பத்தி நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளும் நோக்கில், முதல் தடவையாக இலங்கையில் இந்த மாநாடு ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தித்திறன் அமைப்பின் நிபுணர்களினது வளநபர் பங்களிப்பில் 2014.11.15 ஆம் திகதி செத்சிறிபாய இரண்டாம் கட்டக் கட்டிடத் தொகுதியில் நடத்தப்பட்டது. அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கரு பற்றிய அறிவுடைய அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய துறைகளைப் பிரதி-நிதிப்படுத்தி சுமார் 200 அலுவலர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.





**Lean மாநாட்டின் விஷேட நிகழ்வுகள்**

### சிறு மற்றும் நடுத்தர அளவான தொழிற்முயற்சியாளர்கள் மாநாடு

சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களின் மாநாடு 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை செத்சிறிபாய இரண்டாம் கட்டக் கட்டிடத்தொகுதி பிரதான மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இதன் போது இருபது வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இலங்கையின் ஆறு பிரதிநிதிகளும் அண்ணளவாக 200 சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்-முயற்சியாளர்களுடன் தமது விஷேட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இங்கு S5, ISO,MIS,GMP,Kaizen, அறிவு முகாமைத்துவம், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் (Supply Chain Management), கைத்தொழில் பொறியியல் (Industrial Engineering), தொழில்நுட்ப மேம்பாடு (Technology upgrading), தாவர உற்பத்தி (Green Product), Lean உற்பத்தி சார்ந்த செயன்முறைகள் (Lean Manufacturing practices), மூலப்பொருட்கள் ஒழுக்கு (Material flow), ஆகுசெலவுக் கணக்கீடு (cost Accounting) மற்றும் புத்தாக்கம் (Innovation) முதலியன போன்ற எண்ணக்கருக்களில் விஷேட அனுபவங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த மாநாடு இலங்கையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவான தொழில்-முயற்சியாளர்களுக்கு புதிய ஒரு அனுபவமாக இருந்தது.



மாநாட்டு ஏற்பாட்டுக் குழு



மாநாட்டு நிகழ்வு

## 5. விஷேட நிகழ்வுகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

தன்சானிய நாட்டு உற்பத்தித்திறன் அலுவலர்கள் தம்மிடமுள்ள விஷேட அனுபவங்கைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கைக்கு வருகை தந்தமை ஒரு விஷேட சந்தர்ப்பமாகும். இதன் போது கொகொ கோலா நிறுவனத்திலும் மற்றும் உற்பத்தித்திறன் விருது பெற்ற ஹிக்கஸ்வத்த வித்தியாலயத்திலும் கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.



கள விஜயம் - ஹிக்கஸ்வத்த வித்தியாலயம்



கள விஜயம் - கொகா கோலா நிறுவனம்

## 5.1 தேசத்திற்கு மகுடம்

தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சியை முன்னிட்டு குருனாகல், புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் கல்வித் துறை, அரச மற்றும் தனியார் துறை ஆகிய துறைகளைப் பிரதி நிதிப்படுத்தி 2013 ஆம் ஆண்டில் நடத்திய நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய உற்பத்தித்திறன் செயலகம் செயற்படுத்துகின்றது. தேசிய உற்பத்தித்திறன் செயலகக் கண்காட்சி கொட்டகை உற்பத்தித்திறன் பற்றி மக்களை விழிப்பூட்டும் பொருட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பாடசாலையின் மாணவர்கள் அடங்கலாக அதிக மக்கள் இந்தக் கண்காட்சிக் கொட்டகையைப் பார்வையிட்டனர்.



உற்பத்தித்திறன் செயலகத்தின் கண்காட்சிக் கொட்டகை





தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சிக் கொட்டகையின் பதவியணி

## 6. உற்பத்தித்திறன் தொடர்பான விளம்பர விடயங்கள்

உற்பத்தித்திறன் எண்ணக்கருவை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பொருட்டு உற்பத்தித்திறன் செயலகம் பல வகையான ஊடகங்களைப் பயன்-படுத்துகின்றது. இதனூடாக உற்பத்தித்திறன் தொடர்பான மக்களின் அறிவை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 2012/2013 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித்திறன் விருது விழாவை முன்னிட்டு சபல செய்திப் பத்திரிகையின் ஒரு விஷேட பிரிவும் வெளியிடப்பட்டது.

**'சபல செய்திப் பத்திரிகை'**










**உற்பத்தித்திறன் செயலகத்தின் வெளியீடுகள் தொடர்பில் செய்யப்பட்ட செலவுகள் பற்றிய விபரம்**

| விடயம் | செலவு |
|---|---|
| சபல செய்திப் பத்திரிகை | 294,000.00 |
| பயிற்சிக் கால அட்டவணை புத்தகம் (750) | 38,556.00 |
| 3R பதாகைகள் (20000) | 45,000.00 |
| விளம்பரப் பதாகைகள் (70) | 97,000.00 |
| தாவரங்கள் உற்பத்தித்திறன் பற்றிய நூல் | 130000.00 |
| 5 s சிறு பதாகைகள் | 60000.00 |
| 3 R சிறு பதாகைகள் | 80,424.00 |
| லூடோ ஆவணம் (Ludo Board) (2,60,000) | 1646400.00 |
| 5 s பெரும் விசாலமான பதாகைகள் (10000) | 106243.20 |
| 5 s சிங்கள நூல் (15,000) | 210000.00 |
| செய்திப் பத்திரிகை அறிவித்தல் | 1087940.00 |
| மொத்தம் | 3,795,563.20 |






உற்பத்தித்திறன் எண்ணக்கருவையும் செயற்பாடுகளையும் மாணவர் மத்தியில் பிரபல்லியப்படுத்தும் பொருட்டு விஜய செய்திப் பத்திரிகையுடன் ஒரு லூடோ ஆவணமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆரம்ப வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கு மத்தியில் இது மிகவும் பிரபல்லியமடைந்திருந்தது.

உற்பத்தித்திறன் எண்ணக்கருவினுள் மிக முக்கியமாக விளங்கும் தாவரங்கள் உற்பத்தித்திறன் பற்றி சிங்கள மொழியில் எழுதிய ஒரு நூலின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நிமித்தம் 2014 ஆம் ஆண்டு உற்பத்தித்திறன் பற்றிய அந்த நூல் வெளியிடப்பட்டது.